
# திராவிடத்தால் வாழ்கிறோம்

777

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## நிபுணர் குழுவும் தமிழ்நாடு அரசும்!

கல்வித்துறை என்றில்லை, எந்தத் துறையிலும் மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் தமிழ்நாடு அரசு அளவிற்கு ஆவணப்படுத்தியிருக்கிற இன்னொரு மாநிலம், இந்தியாவில் இல்லை. இல்லை. இல்லவே இல்லை என தனது முகநூலில் பதிவிட்டுள்ளார் பத்திரிகையாளர் நெல்சன் சேவியர்.

“ஒரு பிரச்சினையில் ஒரு தீர்வை எட்ட, தமிழ்நாடு அரசு குழு /ஆணையம் இவற்றை ஏன் தொடர்ந்து அமைக்கிறது? இவற்றின் சட்ட மதிப்பு என்ன? துறைசார் நிபுணர்கள் (Subject Matter Authority) தலைமையிலான குழு, நீதிமன்ற வாதங்களில்/தீர்ப்புகளில் ஏற்படுத்தும் தாக்கம் என்ன என்பது பற்றிய எந்தப் புரிதலும் ஒரு தேசியக் கட்சிக்கே இல்லை என்பது, போதாமையா அகம்பாவமா எனத் தெரியவில்லை.

அதுவும் ஒன்றியக் கல்வி அமைச்சருக்கும், மனித வள மேம்பாட்டுத்துறை அதிகாரிகளுக்குமே தமிழ்நாடு அரசின் பதில் கடிதம் புரியவில்லை என்பது வெட்கக்கேடானது.

அண்ணா, கலைஞர், மு க ஸ்டாலின் மூன்று முதலமைச்சர்களும் பல்வேறு பிரச்சினைகளில், தமிழ்நாடு அரசு சார்பில் நியமித்த நிபுணர் குழுக்களும், அதன்வழி எடுத்த முடிவுகளும், ஒரு அரசின் அதிகாரக் கட்டமைப்பை சட்டப்பாதுகாப்புடன் அறிவியல் பூர்வமாக திருத்துவதற்கான சிறப்பான புளு பிரிண்ட் (Blue Print).

நாட்டின் நிர்வாகச் சீர்திருத்தங்களை அமல்படுத்துவதற்கு, தமிழ்நாடு அரசு கைக்கொண்ட பல்வேறு வழிமுறைகளும், அதற்காக மாநில அரசு அமைத்த குழுக்களின் பரிந்துரைகளும் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்ளிட்ட மொத்த அதிகார வர்க்கத்துக்கான பயிற்சி வகுப்பில் நிரந்தரப்பாடம்.

எந்தத் துறையிலும் மாற்றங்களையும், சீர்திருத்தங்களையும் தமிழ்நாடு அரசு அளவிற்கு ஆவணப்படுத்தியிருக்கிற இன்னொரு மாநிலம், இந்தியாவில் இல்லை” என்கிற அவரது இந்தப் பதிவு பலராலும் பகிரப்பட்டு வருகிறது.

## ஃப்ளாஷ்பேக்





நாகை
அ.அசோகன்

### தமிழ்நாட்டில், முதல் கணினி மாவட்டம்!

1996-ஆம் ஆண்டில் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றார், ‘நவீன தமிழ்நாட்டின் சிற்பி’ முத்தமிழறிஞர் கலைஞர். ஆட்சிப் பொறுப்பேற்றதும் திருவாரூரைத் தலைநகரமாகக் கொண்டு புதிய மாவட்டத்தை அறிவித்தார். 1998-ஆம் ஆண்டில் நடைபெற்ற புதிய ஆட்சியர் அலுவலகத் திறப்பு விழாவில் தலைவர் கலைஞர் அவர்களுடன், இன்றைய பொதுச் செயலாளர் துரைமுருகன், அண்ணன்கள் ஆற்காடு வீராசாமி, ரகுமான்கான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். அன்றைய மாவட்ட ஆட்சித் தலைவர் உமா சங்கர் உடனிருந்தார். தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் என்ற உரிமையுடன், நானும் கலந்துகொண்டது மறக்க முடியாத நிகழ்வு. தலைவரின் கனவை நனவாக்கும் வகையில், திருவாரூர் தமிழ்நாட்டிலேயே முதல் கணினி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு செயல்படத்தொடங்கியது.

– நாகை அ.அசோகன்
சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்,
திருவாரூர்.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## மலரும் நினைவுகள்

## வரலாறு

### முதல் தமிழிசைக் கல்லூரி!

1929-ஆம் ஆண்டில், சிதம்பரத்தில் முதன்முதலில் தமிழிசைக் கல்லூரியை உருவாக்கினார், சர் அண்ணாமலை செட்டியார். 19, 20-ஆம் நூற்றாண்டுகளில் பார்ப்பனர் அல்லாத நிலப்பிரபுக்களிடம் உதவி பெற்று வாழ்ந்த கர்நாடக இசைக் கலைஞர்கள்தாம், இதர வகுப்பார் தமிழிசையைப் பாடும் வாய்ப்புகளைத் தடுத்தனர். அதற்கு எதிராக, தமிழிசையை வளர்க்க வேண்டும் என, கல்வித் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதற்கென தனிக் கல்லூரியும் உருவாக்கப்பட்டது.

## இது பெரியார் மண்

ர.பிரகாசு

2

**பகுத்தறிவுக் கொள்கைகளை முழுமையாகக் கடைப்பிடிக்கும் ஊர்களைப் பற்றிய பதிவாக ஒரு தொடர்.**






# சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு!

## வாழ்ந்து காட்டும் செக்கடிக்குப்பம்

அம்மி மிதித்து அருந்ததி பார்த்து, பார்ப்பனர்களை வைத்து, சடங்குகள் செய்து நடைபெற்றால்தான் அது திருமணம் என்று இன்றும் கருதுவோர் பலர் இருக்க, 1925-ஆம் ஆண்டில் சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய பெரியார், சுயமரியாதைத் திருமண முறையை, தமிழர்களுக்குத் தந்தார்.

இந்தத் திருமண முறையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சம்மதம் இருந்தால் போதும், பார்ப்பனர்களை அழைக்கத் தேவையில்லை, சடங்குகள் தேவையில்லை, தாலியும் கட்டாயமில்லை. மாலைமாற்றிக் கொண்டு, உறுதிமொழி எடுத்துக்கொண்டால் போதுமானது. பெரியார் அறிமுகப்படுத்திய இந்த எளிமையான திருமணமுறைக்கு, 1967-இல் அண்ணாவின் ஆட்சி அமையும் வரை சட்டப்பூர்வ அங்கீகாரம் கிடைக்கவில்லை. ஆனாலும், பல ஆயிரக்கணக்கானோர் சுயமரியாதைத் திருமணம் புரிந்தனர்.

அண்ணா இயற்றிய சட்டத்தால் இத்தகைய சுயமரியாதைத் திருமணங்கள் சர்வ சாதாரணமாகிவிட்ட போதிலும், வைதீகத் திருமணங்களே இப்போதும் அதிகம். ஆனால், தமிழ்நாட்டுக்கே முன்னுதாரணமாக ஒரு கிராமம், 100% சுயமரியாதைத் திருமணங்களை மட்டுமே நடத்திக் கொண்டிருக்கிறது என்றால் நம்ப முடியுமா? விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டத்தில் உள்ள கோட்டப்பூண்டி ஊராட்சிக்கு உட்பட்ட ஒரு சிறிய கிராமம் செக்கடிக்குப்பம். இதுவரை இந்த கிராமத்தில் ஆயிரத்து ஐநூறுக்கும் அதிகமான சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெற்றுள்ளன.

### மாற்றத்திற்கான விதை!

1968-ஆம் ஆண்டு மலையனூர் பகுதியில் பெரியார் பங்கேற்ற பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. அந்தக் கூட்டத்திற்கு செக்கடிக்குப்பம் பகுதியில் இருந்தும் சிலர் சென்றுள்ளனர். அங்கு பெரியார் பேசிய பேச்சின் தாக்கமே செக்கடிக்குப்பத்தில் நடந்திருக்கும் மாற்றத்திற்குக் காரணம்.

பெரியார் தொண்டரான அர்ஜுனன் அதே ஆண்டு முதன்முதலில் சுயமரியாதைத் திருமணம் செய்துகொண்டார். அந்த ஊர் மக்களுக்கும் சுயமரியாதைத் திருமணத்தின் நோக்கத்தையும், எளிமையையும் உணர்த்தினார். பின்னர் அதுவே அந்த ஊரின் வழக்கமானது. வரதட்சணை என்ற பேச்சுக்கே அங்கு இடமில்லை. அங்கு நடைபெற்ற அனைத்து சுயமரியாதைத் திருமணங்களும் பதிவு செய்யப்பட்டு, அர்ஜுனன் இல்லத்தில் ஆவணங்களாகச் சேகரித்து வைக்கப்பட்டுள்ளன.

சுயமரியாதை இயக்கத்தின் தாக்கத்தால் கல்வி மீதான பற்று இவர்களிடம் அதிகமாகக் காணப்படுகிறது. கடன் சுமை இல்லாத எளிய முறையிலான சுயமரியாதைத் திருமணம், மது அருந்தாமை, குழந்தைகளின் கல்வியின் மீது காட்டும் ஆர்வம் ஆகியவை செக்கடிக்குப்பம் ஆண்களைத் திருமணம் செய்துகொள்ளும் பெண்களையும் வெகுவாக ஈர்க்கின்றன. அதனால், அவ்வூர் பெண்களும் சுயமரியாதைத் திருமண முறையைப் பெரிதும் வரவேற்கின்றனர்.

அதேபோல செக்கடிக்குப்பத்தைப் பொறுத்தவரை ‘திருவிழா’ என்றால் ‘பொங்கல்’ மட்டும்தான். கடந்த சில ஆண்டுகளாக ‘அசுர மன்னர் விழா’ கொண்டாடப்படுகிறது. இதைத்தவிர்த்து, மற்ற மத விழாக்கள் கொண்டாடப்படுவதில்லை. அர்ஜுனன் குடும்பத்தின் சார்பில், அவ்வூரில் ஈ.வெ.ரா. தந்தை பெரியார் பள்ளி நடத்தப்படுகிறது. அவ்வூரின் திருமண முறையில் மட்டுமல்ல, அழைக்கும் பெயர்களில் கூட சமஸ்கிருத வாடை வீசுவதில்லை. ஊரில் திரும்பிய பக்கமெல்லாம் தமிழ்த்தென்றல், விடுதலை விரும்பி, மதியழகன், செந்தமிழ்க் கனி என அழகிய தமிழ்ப் பெயர்களே ஒலிக்கின்றன. ஒட்டுமொத்தத்தில் ஒரு தனிநபரின் முயற்சியால் ஒரு கிராமமே ‘பெரியார் மண்’ ஆனது.

...பயணிப்போம்.

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

53

**``கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...''**



# சீண்டினால்... பொறுக்காது, தமிழ்நாடு!

***‘ஒன்றிய அமைச்சர் என்பவர், மாண்புக்குரியவர். அவருடைய உருவ பொம்மையை தி.மு.க.வினர் எரிக்கலாமா’ என்று விவாதிக்கிறார்களே?***

மாண்புக்குரிய பதவியில் இருக்கும் ஒன்றிய அமைச்சர், தன்னுடைய பொறுப்பை உணர்ந்து பேசியிருக்க வேண்டாமா? தமிழ்நாடு-புதுச்சேரியின் 40 தொகுதிகளிலும் தி.மு.க. தலைமையிலான ‘இந்தியா கூட்டணி’யின் எம்.பி.க்களை மக்கள் வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள் என்றால், அந்த எம்.பி.க்கள் அனைவரும் தமிழர்களின் பிரதிநிதிகள். அவர்களைப் பார்த்து, நாகரிகமற்றவர்கள்-ஜனநாயகமற்றவர்கள்-நேர்மையற்றவர்கள் என்று ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேசும்போது, அதை நாடாளுமன்றத்தில் உள்ள தி.மு.க.வினரும் போர்க்குணத்துடன் எதிர்த்தார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள தி.மு.க.வினரும் தோழமைக் கட்சியினரும் தமிழுணர்வு கொண்டவர்களும் தங்கள் கண்டனத்தை வெளிப்படுத்தும் வகையில், மாநிலத்தின் பல நகரங்களிலும் போராட்டங்களை நடத்தி, உருவபொம்மையை எரித்தார்கள்.

1957-ஆம் ஆண்டு அரசியல் சட்ட எரிப்புப் போராட்டத்தை, பெரியார் அறிவித்தபோது பிரதமராக இருந்த நேரு, “தமிழ்நாட்டில் சில தலைவர்கள் காட்டுமிராண்டிகளாக இருக்கிறார்கள். முட்டாள் தனமாகச் செயல்படுகிறார்கள்” என்று விமர்சித்தார். தமிழ்நாட்டுத் தலைவர்களை பிரதமர் எப்படி அவமதிக்கலாம் என்று வெகுண்டெழுந்து, நேருவுக்கு எதிராக, 1958-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் கருப்புக்கொடி ஆர்ப்பாட்டத்தை தி.மு.க. நடத்தியது. அண்ணா போன்ற தலைவர்கள் முன்கூட்டியே கைது செய்யப்பட்டாலும், சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்திலும், இன்றைய அண்ணா சாலையான அன்றைய மவுண்ட் ரோட்டிலும், தி.மு.க.வினர் நேருவுக்குக் கருப்புக்கொடி காட்டும் போராட்டத்தை நடத்தினர். போலீஸ் நடத்திய துப்பாக்கிச் சூட்டில், திருவல்லிக்கேணி மொய்தீன் பிச்சை, நரசிங்கபுரம் கோவிந்தராவ் என்ற கழகத் தொண்டர்கள் இருவர் உயிர்ப் பலியாயினர்.

> **மொழி, இன உணர்வுகளைச் சீண்டிப் பார்க்க நினைத்தால் தமிழர்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதுதான் வரலாறு.**

தமிழர்களின் உணர்வை நேரடியாகப் புரிந்துகொண்டார் பிரதமர் நேரு. பின்னர், நாடாளுமன்றத்தில் தி.மு.க. எம்.பி.க்களான திருவண்ணாமலை தர்மலிங்கம், ஈ.வெ.கி. சம்பத் ஆகியோரின் வலியுறுத்தலால், ‘இந்தி பேசாத மாநிலங்கள் விரும்புகிறவரை, ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாக நீடிக்கும்’ என்ற உத்தரவாதத்தையும் பிரதமர் நேரு அளித்தார். மொழி, இன உணர்வுகளைச் சீண்டிப் பார்க்க நினைத்தால் தமிழர்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதுதான் வரலாறு.

ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான், தான் தெரிவித்த வார்த்தைகளிலிருந்து பின்வாங்கியதற்குக் காரணம், நமது முதலமைச்சர் சொல்லியுள்ளவாறு தமிழ்நாட்டைச் சேர்ந்த தி.மு.க. மற்றும் தோழமைக் கட்சி எம்.பி.க்களின் போர்க்குணம் தான். நாடாளுமன்ற அவைக்குறிப்பிலிருந்தும் அமைச்சரின் பேச்சு நீக்கப்படும் அளவிற்கு, தமிழர்களின் உணர்ச்சி வெளிப்பட்டுள்ளது.

...வினா தொடரும்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131